

கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி கணபதிகுறிச்சி கிராமத்தில் அரசு நெல் கொள்முதல் நிலைதத்தை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் திறந்து வைத்தார். உடன் பெண்ணாடம் நகர கழக செயலாளர் எம்.குமரவேல், நல்லூர் தெற்கு ஒன்றியக் கழக செயலாளர் செம்பியன் சிவதியாகராஜன் மற்றும் ஒன்றிய கழக கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

# திருப்பூரில் பெரியார் - அண்ணா சிலை முன்பு கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., அறிக்கை!



திருப்பூர், ஜூலை 27-

ஒரு நாட்டின் நிதிநிலை அறிக்கை என்பது இந்தியத் திருநாட்டின் அனைத்து மாநிலங்களுக்கும் உரிய பங்கினை பகிர்ந்தளித்து நாடு முழுவதும் சமச்சீரான வளர்ச்சியை உருவாக்கிட உதவுவதுடன், நாட்டில் வாழும் கடைக்கோடி மனிதர்களின் வாழ்வை மேம்படுத்தும் கொள்கை பிரகடனமாகவே இருக்க வேண்டும். ஆனால் இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை, ஒட்டு மொத்த இந்திய நாட்டிற்கான நிதிநிலை அறிக்கையாக தெரியவில்லை. மாறாக தங்கள் ஆட்சியை காப்பாற்றிக் கொள்வதற்காக சில மாநிலங்களுக்கு மட்டும் நிதியை தாராளமாக அள்ளிக் கொடுத்தும், நாட்டின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்து வரும் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் மீது வன்மத்தை கக்கிடும் வகையில் இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது. ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் மாற்றாந்தாய் போக்குடன் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க ஒன்றிய அரசைக் கண்டித்து இன்று (27.07.2024-சனிக்கிழமை) காலை 09.00 மணியளவில் திருப்பூர் இரயில் நிலையம் முன்பு அமைந்துள்ள தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா சிலை அருகில் திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர் க. செல்வராஜ் ஆகிய எனது தலைமையில் மாநகர கழக செயலாளர்கள் முன்னிலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

அதுசமயம், திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்டக் கழக பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் இந்நாள் முன்னாள் நிர்வாகி கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக தோழர்கள் அனைவரும் இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வதோடு, பொது மக்களும் பெருந்திரளாக கலந்து கொள்ள வழிவகை செய்திட்டு இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை வெற்றியடைய செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### ஒன்றிய அரசைக் கண்டித்து

# திருவாரூரில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## பூண்டி.கே.கலைவாணன் அறிக்கை!



திருவாரூர், ஜூலை 27-

தமிழ்நாட்டினை இந்திய அரங்கில் முதன்மை மாநிலமாக திகழ வைத்து பொற்கால ஆட்சி நடத்தும் முதல்வர் திராவிட நாயகர் கழக தலைவர் தளபதி அவர்கள் வைத்த கோரிக்கைகளை புறம்தள்ளி, தமிழ்நாட்டை புறக்கணித்த ஒன்றிய பாஜக அரசினைக் கண்டித்து, திருவாரூரில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுத்து மாவட்டச் செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ., விடுத்துள்ள அறிக்கையாவது,

"தமிழ்நாட்டின் வளர்ச்சிக்ககவும், தமிழ்நாடு சந்தித்த தொடர் இயற்கை பேரிடர்களில் இருந்து மீள்வதற்காகவும், நம் கழக தலைவர் தளபதியார் அவர்கள் முன்வைத்த கோரிக்கைகளை முற்றிலுமாக புறக்கணித்து ,ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் மாற்றாந்தாய் மனப்போக்குடன் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பாஜக ஒன்றிய அரசை கண்டித்து தலைமைக்கழக அறிவிப்பின்படி 27.07.2024 சனிக்கிழமையான இன்று காலை 10.00மணிக்கு திருவாரூர் புகை வண்டி நிலையம்அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

அதுசமயம் இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், கிளைக்கழக,வார்டு கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக உடன்பிறப்புக்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர்அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில்

# தாராபுரம், அண்ணா சிலை முன்பு கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் அறிக்கை!



திருப்பூர், ஜூலை 27-

ஒரு நாட்டின் நிதிநிலை அறிக்கை என்பது இந்தியத் திருநாட்டின் அனைத்து மாநிலங்களுக்கும் உரிய பங்கினை பகிர்ந்தளித்து நாடு முழுவதும் சமச்சீரான வளர்ச்சியை உருவாக்கிட உதவுவதுடன், நாட்டில் வாழும் கடைக்கோடி மனிதர்களின் வாழ்வை மேம்படுத்தும் கொள்கை பிரகடனமாகவே இருக்க வேண்டும். ஆனால் இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை, ஒட்டு மொத்த இந்திய நாட்டிற்கான நிதிநிலை அறிக்கையாக தெரியவில்லை. மாறாக தங்கள் ஆட்சியை காப்பாற்றிக் கொள்வதற்காக சில மாநிலங்களுக்கு மட்டும் நிதியை தாராளமாக அள்ளிக் கொடுத்தும், நாட்டின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்து வரும் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் மீது வன்மத்தை கக்கிடும் வகையில் இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது. ஒன்றிய நிதி நிலை அறிக்கையில் மாற்றாந்தாய் போக்குடன் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க ஒன்றிய அரசைக் கண்டித்து இன்று (27. 07.2024 -சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் தாராபுரம், அண்ணா சிலை முன்பு திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர் இல.பத்மநாபன் ஆகிய எனது தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் முன்னிலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

அதுசமயம், திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.கழகத்திற்குட்பட்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளை கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக பிரதிநிதிகள், துணை அமைப்புகளின் இந்நாள் முன்னாள் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதி நிதிகள், கழக தோழர்கள்அனைவரும் இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வதோடு, பொது மக்களும் பெருந்திரளாக கலந்து கொள்ள வழிவகை செய்திட்டு இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை வெற்றியடைய செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### வல்லம்ஒன்றியத்தில் தொடக்கப்பள்ளி - நடுநிலைப் பள்ளி

# 'ஆசிரியர்களுக்கு கையடக்க கணினி!'

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார்

செஞ்சி, ஜூலை 27-

விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஒன்றியத்தில் உள்ள அரசு தொடக்கப்பள்ளி, நடுநிலைப் பள்ளியில் எண்ணும் எழுத்தும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு மாணவர்களின் கற்பித்தலில் மதிப்பீடு செய்வதற்குகையடக்க கணினி வழங்கும் நிகழ்சி வல்லம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார் தலைமை தாங்கினார்.

வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உதயகுமார், இளங்கோமுன்னிலை வகித்தனர்.வட்டார கல்வி அலுவலர்முருகன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் சிறு பான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு வல்லம் ஒன்றியத்தில் உள்ள அரசு தொடக்கப்பள்ளி, நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு கையடக்க கணினியை வழங்கி சிறப்புரையாற்றினார்.




பெரம்பலூரில் வாகன ஓட்டுனர் நடத்துனர்களுக்கான சுகாதார முதல் உதவி பயிற்சி வகுப்பு ஆண்டிமுத்து சின்னப்பிள்ளை அறக்கட்டளை சார்பில் தொடங்கப்பட்டது. இதில் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், போக்குவரத்துத் துறை அதிகாரி பி.பிரபாகர் மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி வட்டம், மழையூர் கிராமம், முத்துலெட்சுமி திருமண மஹாலில் நடைபெற்ற "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாமில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் 23.07.2024 அன்று மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாமினை பார்வையிட்டு, மக்களிடம் கோரிக்கைகள் குறித்த விவரங்களை கேட்டறிந்து, கலைஞரின் களவு இல்லம் திட்டத்தின்கீழ் பயனாளிக்கு வீடு கட்டுவதற்கான ஆணையினை வழங்கினார். உடன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு. வை.முத்துராஜா, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வியா. ஜஸ்வர்யா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து

# ஈரோட்டில் இன்று மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## கழகத்தினருக்கு - தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சு. முத்துசாமி வேண்டுகோள்!



ஈரோடு, ஜூலை 27-

ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சு.முத்துசாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஒன்றிய அரசின் 2024ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டிற்கான எந்த சிறப்பு திட்டமும் இல்லை. நமது கோரிக்கைகள் எதுவும் இதில் நிறைவேற்றபடவில்லை . புதிய ரயில்வே திட்டங்கள் அறிவிக்கப்படவில்லை. ஒன்றிய பாஜக ஆட்சியை தாங்கி பிடிக்கும் மாநிலங்களை தவிர மற்ற எல்லா மாநிலங்களையும் நிதி அமைச்சர் மறந்தே போய் விட்டார். "தமிழ்நாடு" என்ற சொல்லே நிதிநிலை அறிக்கையில் இல்லை என்று சொல்வதை விட ஒன்றிய பாஜக ஆட்சியாளர்களின் சிந்தனையிலும், செயலிலும் தமிழ்நாடு இல்லை. இந்த அறிக்கையில் பாராபட்சம், ஏமாற்றமும் தான் இருக்கிறது.

இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு சந்தித்த இரண்டு தொடர் பேரிடர் இழப்புகளுக்கு நிதி வழங்கிட வேண்டுமென்ற தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்கள் முன்வைத்த கோரிக்கைகளை முற்றிலுமாக புறக்கணித்ததாலும் ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் மாற்றாந்தாய் போக்குடன்தமிழ்நாட்டை வஞ்சித் ததாலும் பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து இன்று (ஜூலை 27—சனிக் கிழமை) காலை 10 மணியளவில் ஈரோடு மாவட்டம் காளை மாடு சிலை சிம்னி ஹோட்டல் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

எனவே தெற்கு, வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு மற்றும் அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக தோழர்கள் அனைவரும் தவறாமல் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயலாளரும் அமைச்சருமான சு.முத்துசாமி தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

### ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# சேலம் கோட்டை மைதானத்தில் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஆர்.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. - டி.எம்.செல்வகணபதி எம்.பி. - எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிக்கை!







சேலம், ஜூலை 27-

சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் ஆர்.இராஜேந்திரன் எம்.எல்.ஏ., சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி., சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது அனைத்து மாநிலத்தையும் உள்ளடக்கி ஒருங்கிணைந்ததாக இருக்க வேண்டும், ஒரு நாட்டின் நிதிநிலை அறிக்கை என்பது இந்தியத் திருநாட்டின் அனைத்து மாநிலங்களுக்கும் உரிய பங்கினை பகிர்ந்தளித்து நாடு முழுவதும் சமச்சீரான வளர்ச்சியை உருவாக்கிட உதவுவதுடன், நாட்டில் வாழும் கடைக்கோடி மனிதர்களின் வாழ்வை மேம்படுத்தும் கொள்கை பிரகடனமாகவே இருக்க வேண்டும்.

ஆனால் இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை, ஒட்டுமொத்த இந்திய நாட்டிற்கான நிதிநிலை அறிக்கையாக தெரியவில்லை. மாறாக, பிரதமர் மோடி தனது ஆட்சியை காப்பாற்றிக் கொள்வதற்காக சில மாநிலங்களுக்கு மட்டும் நிதியை தாராளமாக அள்ளிக் கொடுத்தும், நாட்டின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்து வரும் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் மீது வன்மத்தை கக்கிடும் வகையில் இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது. ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் மாற்றாந்தாய் போக்குடன்தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. ஒன்றிய அரசை கண்டித்து சேலம் கோட்டை மைதானத்தில் இன்று (27.07.2024-ஆம் தேதி சனிக்கிழமை) காலை 09.30 மணி அளவில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்நடைபெற உள்ளது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் சேலம் மத்திய, கிழக்கு, மேற்கு மாவட்டக் கழகத்தைச் சேர்ந்த மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, நகர கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய கழகச் செயலாளர்கள், பகுதி கழகச் செயலாளர்கள், நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் மாநகர கோட்டக் கழக செயலாளர்கள், ஊராட்சிகளில் உள்ள கிளைக் கழக செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் வருகை தந்து கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

### வாட்ஸ் அப்பில் வந்த செய்தி !






கரூர் மாவட்டம் குளித்தலை வட்டம் அய்யர்மலை இரத்தினகிரீஸ்வரர் திருக்கோயிலில் ரூ.9.10 கோடி மதிப்பிலான கம்பி வட ஊர்தி, சேவையை, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்தில் இருந்து காணொளி காட்சி வாயிலாக தொடங்கி வைத்ததை தொடர்ந்து, கரூர் மாவட்ட ஆட்சியர் மீ. தங்கவேல்,எம்.எல்.ஏ.க்கள் இரா.மாணிக்கம் (குளித்தலை), க.சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்) ஆகியோர் பார்வையிட்டனர்.